உறுப்பினர்களும், அமைச்சர்களும் திருப்தி அடைந்தாலே போதும். நன்றி.

6. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகளைப் பின்னர் எடுத்துக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று எடுப்பதாக இருந்த மற்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த முன்னறிவிப்புகள் பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

7. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நூற்று இருபத்து ஏழாவது முதல் நூற்று முப்பத்து ஆறாவது வரையிலான, பத்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் தொண்ணூற்று எட்டாவது முதல் நூற்று நான்காவது வரையிலான ஏழு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2008-2009 ஆம் ஆண்டிற்கான